**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SEESSIONS JUDGE, SALEM.**

**O.S.No.86/2016**

Date: 21.02.2023.

PW1– சாட்சி அழகேசன் இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் B.Com., படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதப்படிக்க தெரியும். ஆங்கிலம் ஓரளவிற்கு தான் படிக்க தெரியும். என் உடன் பிறந்த சகோதரிகள் உமாராணி, சித்ரா, கலா, சாந்தா ஆகியோர்கள். உமாராணிக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாவும், சித்ராவிற்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவும், கலாவிற்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்பாகவும், சாந்தாவிற்கு சுமார் 13, 14 வருடங்களுக்கு முன்பாகவும் திருமணம் நடைபெற்றது.

கலாவின் கணவர் இறந்து சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். என் சகோதரிகளான கலா மற்றும் சாந்தா ஆகியோர் என் தாயாருடன் முத்துநாய்க்கன்பட்டியில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் குடியிருந்து வரும் வீட்டை பொருத்தும் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். பாகப்பிரிவினை வழக்கில் மொத்தம் 4 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது.

முதல் அயிட்ட சொத்தின் ச.எண்.255/2 அதன் விஸ்தீரணம் 2089 1/2 சது.அடி. முதல் அயிட்ட சொத்து என் தகப்பனார் சித்தையன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. 1982–ம் ஆண்டு வாங்கப்பட்டது. சித்தையன் உமாராணியின் மகனான சண்முகம் என்பவர் பெயருக்கு அந்த சொத்தை பொறுத்து Settlement எழுதி வைத்திருக்கிறார். அந்த சொத்தில் சண்முகம் மற்றும் அவரது தாயார் உமாராணி, தந்தை பூபதி ஆகியோர் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் என் தகப்பனார் எழுதி வைத்த மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 9 வது பக்கத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த பத்திரமானது 27.11.2009 அன்று

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 2009ம் ஆண்டே மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் என் தகப்பனாரால் சண்முகத்திற்கு ஆதரவாக எழுதி வைக்கப்பட்டது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

நான் 2016ம் ஆண்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தேன். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துதான் பாகப்பிரிவினை வழக்கில் முதல் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் என் தாயார் மற்றும் சகோதரிகளை மட்டும்தான் தரப்பினர்களாக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். சண்முகம் பாக வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. இந்த பாக வழக்கில் நான் மேற்படி தான பத்திரமானது செல்லாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் பாக பிரிவினை பரிகாரம் மட்டும்தான் கேட்டிருக்கிறேன்.

தாவா முதல் அயிட்ட சொத்தை பொறுத்து சரியான தரப்பினர்களை வழக்கில் சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

2ம் அயிட்ட சொத்தின் ச.எண்.255/2 அதன் விஸ்தீரணம் 1425 ச.அடி. அந்த சொத்தில் ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டில் என் சகோதரி சாந்தா குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த வீட்டை பத்மா என்ற நபருக்கு வாடகைக்கு விட்டிருக்கிறேன். அந்த வாடகையை 1ம் பிரதிவாதி பெற்று வருகிறார் என்று சாட்சி சுயமாக சொல்கிறார். பத்மாவுடன் வாடகை ஒப்பந்தம் எதுவும் நான் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

2ம் அயிட்ட சொத்து என் தகப்பனாரின் சுயசாம்பாத்திய சொத்தாகும். 1983–ம் ஆண்டு என் தகப்பனார் கிரையம் வாங்கினார். அந்த சொத்தை பொறுத்து 15.12.2014ம் தேதி என் தகப்பனார் ஒரு உயில் எழுதி அதனை சேலம் கிழக்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறார் என்றால் என் தகப்பனார் உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது அவரை சாந்தா மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறி அழைத்து சென்று கையொப்பம் பெற்றுக் கொண்டதாக கேள்விப்பட்டேன்.

என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது அவரை அழைத்து சென்று பொய்யாக சாந்தா கையொப்பம் பெற்றுக் கொண்டார் என்று நான் சொல்வது தொடர்பாக என் தகப்பனார் இறந்ததற்கு பிறகாவது சாந்தா மீது நான் குற்ற வழக்கு

நடவடிக்கையோ அல்லது வேறு சட்டபூர்வமான நடவடிக்கையோ எடுத்தேனா என்றால் இல்லை. 15.12.2014 அன்று எழுதப்பட்ட மேற்சொன்ன உயிலை என் தகப்பனார் சேலம் கிழக்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் வைப்பீடு செய்து வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என் தகப்பனார் 19.10.2015 அன்று காலமாகிவிட்டார். என் தகப்பானார் காலமானதற்கு பிறகு அவரது இறப்பு சான்றை காண்பித்து காந்தா மேற்படி உயிலை மேற்படி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டார் என்றால் இப்போதுதான் அந்த ஆவணத்தை நான் பார்க்கிறேன். (உயிலை டெபாசிட் செய்தது சம்மந்தமாக எதிர் வழக்குறையில் சொல்லப்படவில்லை என்றும் எனவே அது சம்மந்தமாக கேள்விகளை அனுமதிக்க கூடாது என்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு பதிவு).

06.06.2016 அன்று என் தகப்பனாரின் இறப்பு சான்றானது மேற்படி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆவண எண் 90/2016 உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் 5-ம் பிரதிவாதியால் பெறப்பட்டு அதன் அடிப்படையில் 2-ம் அயிட்ட சொத்தானது 5-ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சித்ரா என்பவருக்கு அந்த சொத்தை கொடுப்பதாக இருந்ததாகவும் அந்த சொத்தை ஏமாற்றி சாந்தா எழுதிக் கொண்டதாகவும் சாட்சி சொல்கிறார்.

மேற்படி உயிலில் என் மாமா பூபதி மற்றும் கலைவாணி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி உயிலின்படி 2ம் அயிட்ட சொத்து சாந்தாவுக்கு சொந்தமானது என்றாலும் அவர்தான் அந்த சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

தாவா 3ம் அயிட்ட சொத்தின் ச.எண்.255/2. அந்த சொத்து என் தாயாரின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. என் தகப்பனார்தான் என் தாயார் பெயருக்கு கிரையம் வாங்கினார். 1984ம் ஆண்டு கிரையம் வாங்கினார். என் அத்தை ராஜரத்தினம் என்பரிடமிருந்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் என் தாயார் பெயரிலான பத்திரம் என்றால் சரிதான். (A3 ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டது). என்

தாயார் உயிருடன் இருக்கும்போது அவர் பெயரிலான கிரைய பத்திரம் என்னிடம் எப்படி வந்தது என்றால் அனைத்து சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் என் தகப்பனார் என்னிடம்தான் கொடுத்து வைத்திருந்தார்.

என் தகப்பனார் அவரது பணத்தை கொண்டு சொத்தை என் தாயார் பெயருக்கு கிரையம் வாங்கியதாக ஏ 3 ஆவணத்தில் வாசகம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் அது போன்று வாசகங்கள் எழுத மாட்டார்கள் என்று சாட்சி சுயமாக சொல்கிறார். என் தாயாருக்கு வருமானம் எதுவும் கிடையாது என்றும் அவர் வீட்டோடுதான் இருந்தார் என்றும் சாட்சி சுயமாக சொல்கிறார். நான் சொன்னது போல் என் தகப்பனார்அவரது வருமானத்தை கொண்டு ஏ 3 கிரையத்தை என் தாயார் பெயரில் வாங்கவில்லை என்றாலும் 3ம் அயிட்ட சொத்து என் தாயாரின் தனிப்பட்ட சுய சம்பாத்தியம் என்றாலும் சரியல்ல. அந்த சொத்தில்தான் என் தாயார் குடியிருந்து வருகிறார்.

3ம் அயிட்ட சொத்து என் தாயாரின் தனிப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்பதால் அதில் நான் சட்டப்படி பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ஏ 3 கிரைய பத்திரத்தை என் தகப்பனார் விருப்பப்பட்டு என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் அதனை நான் என் தாயாருக்கு தெரியாமல் எடுத்து சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல.

தாவா 4ம் அயிட்ட சொத்தின் ச.எண்.255/2. அந்த சொத்து என் தகப்பானரின் சுய சம்பாத்தியம் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த சமயத்திலேயே அந்த சொத்தை பொறுத்து என் சகோதரி கலா பெயருக்கு சேலம் கிழக்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் இறந்ததற்கு பிறகு 06.06.2016 அன்று கலா மேற்படி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து மேற்படி உயிலின் சான்றிட்ட நகலை பெற்றிருக்கிறார் என்றால் சரியல்ல. யாருக்கும் தெரியாமல் என் தகப்பனாரை அழைத்து சென்று உயில் எழுதிக் கொண்டது சரியில்லை என்று சாட்சி சுயமாக சொல்கிறார்.

மேற்படி உயிலின்படி தாவா 4ம் அயிட்ட சொத்து கலாவிற்கு சொந்தமானது என்றால் சரியல்ல. என் சகோதரி மேற்படி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் என்

தகப்பனாரின் இறப்பு சான்றை கொடுத்து உயிலின் சான்றிட்ட நகல் பெறுவதற்கு என் மாமா பூபதியும் கலைவாணியும் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் 15.12.2014 தேதியிட்ட உயிலின் சான்றிட்ட நகலில் 06.06.2016 தேதியிட்ட மாவட்ட பதிவாளர் அலுவலக குறிப்பில் உள்ள பூபதி என்ற கையொப்பம் என் மாமாவின் கையொப்பம்தான் (வாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு பதில் பதிவு செய்யப்பட்டது). தாவா 4ம் அயிட்ட சொத்தானது என் தகப்பனாரின் சுய சாம்பாத்தியம் என்பதால் அவர் உயில் எழுதி வைத்ததின் அடிப்படையில் அந்த சொத்து 4ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும் அந்த சொத்தில் 4ம் பிரதிவாதிதான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

தாவா 4ம் அயிட்ட சொத்தில் கலா குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் தாவா 3ம் அயிட்ட சொத்தில் என் தாயாருடன் வசித்து வருகிறார். 4ம் அயிட்ட சொத்தானது வாடகைக்கு விடப்பட்டுள்ளது. யாருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

09.04.2012 அன்று என் தகப்பனார் எனக்கு ஆதரவாக ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தின் விஸ்தீரணம் 1131 சதுர அடி. அந்த சொத்து ச.எண்.250/38–ல் உள்ளது. அந்த சொத்தை பொறுத்து நான் ஓமலூர் நீதிமன்றத்தில் ஒரு அசல் வழக்கு தாக்கல் செய்து அது இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு 1131 சதுர அடிக்குதான் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த சொத்தில் 2 அடுக்குமாடி கட்டிடம் இருக்கிறது. அதன் தரைதளத்தில் 5 கடைகள் வாடகைக்கு விட்டிருக்கிறேன்.

முதல் தளத்தில் 3 வீடுகளை வாடகைக்கு கொடுத்திருக்கிறேன். 2ம் தளத்திலும் 3 வீடுகளை வாடகைக்கு கொடுத்திருக்கிறேன். மேற்படி என் பெயரிலான தான பத்திரத்தை என் தகப்பனார் 2014ம் ஆண்டு ரத்து செய்துவிட்டார். அவ்வாறு ரத்து செய்த விவரம் எனக்கு 2015ம் ஆண்டு தெரியும். மேற்படி என் பெயரிலான தான பத்திர சொத்தை நான் தாக்கல் செய்த பாக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தானது பாக வழக்கில் சேர்க்கப்படாத காரணத்தினால் பாக வழக்கு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் எனது தாயாருக்கு தெரியாமல் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்டத்தில் உமாராணியின் மகன் சண்முகம் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தில் சாந்தாவும், 4வது அயிட்ட சொத்தில் கலாவும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்துகள் என் தாயாரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சாட்சி சொல்கிறார். தாவா 3ம் அயிட்ட சொத்தின் முதல் தளத்தில் நான் குடியிருந்து வருகிறேன். எத்தனை தளம் கொண்ட வீடுகள் தாவா சொத்துக்களில் இருக்கிறது என்று பாக வழக்கு சொத்து விவரத்தில் சொல்லியிருக்கிறேன். அது போன்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் எனது கூட்டு அனுபவத்தில் இருக்கிறது என்று காட்டுவதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அசல் பத்திரங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாவா சொத்தின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றாலும் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.